10.02.2026.

OS.243/2022

DW1- தெய்வக்குமாரி – க/பெ. நாகராஜ்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 10.02.2026.

குறுக்கு விசாரணை : (வாதி தரப்பில்)

1. வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் என் இடத்தில் பாதை வேண்டும் என் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2. வழக்கு விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும்.

3. வாதி என் இடத்தில் பாதை கேட்கவில்லை என்றும் வாதியின் இடத்தில் நான் கீழ்பக்கம் 10 அடியும், மேல்பக்கம் 5 அடியும் ஆக்கிரமிப்பு செய்ததால் அதனை அகற்றக்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

4. வாதி வீட்டிற்கு எந்த பக்கம் என் சொத்து உள்ளது என்றால் தெற்கு பக்கம் உள்ளது.

5. அந்த சொத்தை என் அப்பா எப்போது யாரிடம் கிரையம் பெற்றார் என்றால் பொது அதிகார முகவர் காசி என்பவரிடம் 1990ம் வருடம் கிரையம் பெற்றார். அந்த கிரைய பத்திரத்தின் விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும்.

6. 1990ம் வருடத்தில் என் தகப்பனார் எத்தனை விஸ்தீரணத்திற்கு கிரையம் பெற்றார் என்றால் 3 சென்டிற்கு கிரையம் பெற்றார்.

7. அந்த 3 சென்டிற்கு கிழமேல், தென்வடல் அளவு எவ்வளவு என்றால் எனக்குத் தெரியாது.

8. என் இடத்திற்கு கீழ்பக்கம் உள்ள இடம் யாருடையது என்றால் தெரு உள்ளது.

9. அந்த தெருவின் நீள, அகலம் தெரியுமா என்றால் தெரியாது.

10. என் வீட்டிற்கு வடபக்கம் யார் உள்ளார் என்றால் வாதி மாரிமுத்து இடம் உள்ளது.

11. வாதி மாரிமுத்து யாரிடம் கிரையம் பெற்றார் என்றால் செல்லையா என்பவரிடம் கிரையம் பெற்றார்.

12. செல்லையாவிடம் மாரிமுத்து கிரையம் வாங்கும் போது தென்வடல் மேல்தலை 39 அடியும், கீழ்தலை 27 அடியும், கிழமேல் 40 அடிக்கும் உட்பட்ட இடத்தை கிரையம் வாங்கினார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

13. வாதி கிரையம் பெற்ற இடத்தின் தென்பக்கத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

14. என் இடத்திற்கு தென்பக்கம் என்ன உள்ளது கிழமேல் ரோடு உள்ளது.

15. என் வீட்டிற்கு தென்பக்கம் வாதி வீட்டின் குடிநீர் பைப் உள்ளது என்றால் சரிதான் அது மின்கம்பம் உள்ள தெருவில் உள்ளது.

16. நான் இந்த குடிநீர் பைப்பை உடைத்து பள்ளம் தோண்டும் போது தான் பிரச்சனை ஏற்பட்டு வாதி இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல.

17. நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றும் நான் பள்ளம் தோண்டியதால் தான் வழக்கே உற்பத்தியானது என்றால் சரியல்ல.

18. நீதிமன்ற ஆணையர் தபசில் சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

19. நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்யும் போது நான் உடனிருந்தேன் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையருக்கு உதவியாக சர்வேயரும் வந்தார் என்றால் சரிதான்.

20. நீதிமன்ற ஆணையரும், நில அளவையரும் இடத்தை அளக்கும் போது வடபக்கம் மேற்கே இருந்து அளக்கும் போது 5 மீட்டர் குறைவாகவும், அதேபோல் தெற்கு பக்கம் கிழக்கில் இருந்து மேற்கே அளக்கும் போது 5 மீட்டர் குறைவாக இருந்தது என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றும்

ஆணையர் இந்த விவரத்தை தான் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல.

21. நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில் குடிநீர் பைப்பை உடைத்து நான் பள்ளம் தோண்டியதை குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல.

22. பிரதிவாதி இடத்திற்கு வடக்கே உள்ள முள்வேலி யார் அமைத்தார் என்றால் நான் தான் அமைத்தேன்.

23. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் முள்வேலி வாதிக்கு பாத்தியப்பட்டது எனவும், முள்வேலி வரை உள்ள இடம் வாதிக்கு உரிமையானது எனவும் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல.

24. ஆணையர் அறிக்கை சரியானதா தவறானதா என்றால் தவறானதாகும்.

25. ஆணையர் வரைபடத்தில் பிரதிவாதியின் வீடு மற்றும் மனை கிழமேல் மேல்தலை 40 அடியும், கீழ்தலை 32 அடியும் காட்டியுள்ளார் என்றால் தவறு வேலி வரை எனக்கு இடம் உள்ளது.

26. ஆணையர் அறிக்கையின் படி எனக்கு 3.1/2 சென்ட் இடம் உள்ளது என்றால் சரியல்ல.

27. என் தகப்பனார் 3 சென்ட் கிரையம் வாங்கிய நிலையில் ஆணையர் 3.1/2 சென்ட் இடம் என் வசம் இருப்பதாக கூறியுள்ளதால் நானே வாதியின் இடத்தை ஆக்கிரமித்துள்ளேன் என்றால் சரியல்ல.

28. ஆணையர் அவரது அறிக்கையில் கீழ்பக்கம் உள்ள தெருவையும் நான் ஆக்கிரமித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல.

29. எனவே வாதியின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி